# யாழ்ப்பாணம்
# இந்துக்கல்லூரி
# பழைய மாணவர் சங்கம்

## வருடாந்த பொதுக்கூட்டம்

## 05.02.2023

### செயலாளர் அறிக்கை

# கண்ணீர்க் காணிக்கை

எமது செயற்குழு காலத்தில் இறைவனடி சேர்ந்த

முன்னாள் தலைவர் சுந்தரம் டிவகலாலா

அவர்களிற்கும்

எமது செயற்குழு காலத்தில் இவ்வுலகை விட்டுப்பிரிந்த

இந்துவின் மைந்தர்களிற்கும்

எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்**

# செயற்குழு விபரம் 2022/2023

| | | |
|---|---|---|
| போசகர்கள் | :- | கலாநிதி ஆறு திருமுருகன் |
| | | பேராசிரியர் கா. குகபாலன் |
| | | திரு அ. பஞ்சலிங்கம் |
| | | திரு பொ. மகேஸ்வரன். |
| | | திரு ஈ. சரவணபவன் |

முன்மொழியப்பட்ட கௌரவ தலைவர் - பதவிவழி அதிபர் திரு இ. செந்தில்மாறன்

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திரு த. தவரூபன் |
| செயலாளர் | :- | வைத்தியர் கோ. றயீவ் |
| பொருளாளர் | :- | திரு கு. அமரேஸ் |
| உப தலைவர்கள் | :- | திரு ச. சிவகுமரன் |
| | | எந்திரி வி. விஜயகாந் |
| | | எந்திரி சி. விகிர்தன் |
| | | திரு த. சிவரூபன் |
| | | வைத்தியர் பரா நந்தகுமார் |
| உபசெயலாளர் | :- | திரு த. சுஜீவன் |
| உபபொருளாளர் | :- | திரு ஜெ. வேணுகானன் (06.08.2022 வரை) |
| | | திரு ப. சசிவர்ணன் (07.08.2022 முதல்) |
| பத்திராதிபர் | :- | கலாநிதி ச. முகுந்தன் (06.08.2022 வரை) |
| | | திரு சி. யதுராஜ் (07.08.2022 முதல்) |
| செயற்குழு அங்கத்தவர்கள் | :- | வைத்தியர் வே. ஜெகரூபன் |
| | | வைத்தியர் ச. கணேஸ்குமார் |
| | | வைத்தியர் சு. சிவகணேஸ் |
| | | வைத்தியர் அ. அரவிந்தன் |
| | | திரு கு. திலீபன் |
| | | திரு மா. சுதர்சன் |
| | | திரு க. பகீரதன் |
| | | திரு ம. அருள்குமரன் |
| | | திரு கு. நிரஞ்சன் |
| | | திரு கு. கௌதமன் |
| | | திரு த. சிவநேசன் |
| | | திரு கி. அகிலன் |
| | | திரு க. அனுசன் |
| | | திரு அ. யசீகரன் |
| | | திரு அ. லத்தங்கன் |
| | | திரு பா. மிரோஜன் |
| | | திரு சி. பாரதன் (06.08.2022 வரை) |
| | | திரு ச. தமிழன்பன் (07.08.2022 முதல்) |

# இந்துவின் மைந்தர்களே!

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் இந்துவின் மைந்தர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கல்லூரி அன்னைக்கான பணிகளை ஆற்ற சந்தர்ப்பம் வழங்குகிறது. பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் என்பதற்கமைவாக இன்று செயற்பாட்டு அறிக்கையூடாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்வடைகிறேன்.

இந்துவின் மைந்தர்கள் உலகளாவிய ரீதியில் பல்துறை வல்லுனர்களாக திகழ்கின்ற நிலையில் கல்லூரி அன்னைக்கான சேவைகளை பல்வேறு தளங்களில் வழங்கிவருகின்றனர். களத்தில் உள்ள சங்கம் என்ற ரீதியில் இந்த சேவைகள் வழங்குதல்களை ஒழுங்கமைத்து வழங்குவதில் மகிழ்வடைகிறோம்.

கடந்த ஆண்டில் எமது சங்கம் கல்வி, சுகாதார மேம்பாடு, விடுதி மாணவர்களுக்கான நலன்சார் நடவடிக்கைகள் போன்ற செயற்திட்டங்களை முன்னெடுத்திருக்கிறது.

இத்திட்டங்களுக்கு அர்ப்பணிப்பான சேவைகள், ஆலோசனைகள் வழங்கிய செயற்குழு உறுப்பினர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும், ஏனையோருக்கும் செயற்குழு சார்பில் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் எதிர்காலத்தில் எமது சங்கம் எல்லா வகைகளிலும் முன்னேற்றம் பெற்று கல்லூரி அன்னைக்கு சிறப்பான சேவைகளை ஆற்ற வேண்டுமென்று எல்லாம் வல்ல ஞான வைரவப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

கோ.றஜீவ் - செயலாளர்

# ஆரோக்கிய உணவகம்

பாடசாலை மாணவர்களிடையே ஆரோக்கிய உணவுப் பழக்க வழக்கங்களை ஏற்படுத்தும் முகமாக கல்லூரி அதிபரின் வேண்டுகோளிற்கு இணங்க எமது சங்கத்தினால் பாடசாலையிலே ஆரோக்கிய உணவகம் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டுவருகிறது. இவ்வுணவகத்தில் முற்று முழுதாக மாணவர்களிற்கு ஆரோக்கிய உணவு பழக்கவழக்கங்களை ஏற்படுத்தும் முகமாக ஆரேக்கிமான உணவுகள் மாத்திரமே விற்பனை செய்யப்படுகின்றது. அதற்குரிய வழிகாட்டல் ஆலோசனைகளை எமது சுகாதார மேம்பாட்டுக் குழு வழங்கிவருகிறது.

இச்செயற்பாடு ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் பெருமளவிலே வரவேற்பு பெற்ற எமது சங்கத்தின் ஒரு முக்கிய செயற்திட்டமாக உள்ளதுடன் ஏனைய பாடசாலைகளினாலும் முன்மாதிரியான நடவடிக்கையாகப் பார்க்கப்படுகின்றது.

இவ் உணவகத்தினை வர்ணம் பூசி அழகுபடுத்தும் நடவடிக்கை மற்றும் அத்தியவசிய நடவடிக்கைகளுக்காக ஐக்கிய ராட்சிய பழையமாணவர் ஒருவர் ரூபா 5 லட்சத்தினை கடனாக வழங்கியுள்ளார்.

உணவகத்தில் ஆசிரியர்கள் பயன்படுத்தும் பகுதியிலுள்ள கதிரைகள் பழுதடைந்த நிலையில் எமது சங்கத்தினால் 28 புதிய கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# இந்துவின் முத்தமிழ் மாலை

இந்துவின் முத்தமிழ் மாலை நிகழ்வானது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழையமாணவர் சங்கத்தினால் முற்று முழுதாக உள்ளூர் கலைஞர்களினால் நடாத்தப்படும் ஒரு நிகழ்வாகும். இந் நிகழ்விற்காக விற்பனை செய்யப்படும் நுழைவுச்சீட்டுக்கள் மூலம் கல்லூரி வளர்ச்சிகளுக்கு நிதியை பெற்றுக்கொள்ளும் நோக்கினில் ஆரம்பிக்கப்பட்டு வருடாவருடம் நடத்தப்பட்டு வருவது வழைமை.

இந்நிகழ்வு கடந்த சில வருடங்களாக தவிர்க்க முடியாத சூழலினால் நடத்தப்படாத நிலையிலே எமது நிர்வாககுழுவினால் மீண்டும் கடந்த வருடம் (2022) டிசம்பர் 10திகதி மாலை 5மணி முதல் இரவு 10மணி வரை சபாலிங்கம் அரங்கத்தில் நடாத்தப் பெற்றது.

இந்த நிகழ்விலே தமிழருவி சிவகுமாரன் அவர்கள் தலைமையிலான பழையமாணவர்கள் பங்கு பற்றிய விவாத நிகழ்வும் அதேபோல ஜெகதீஸ் அருணாவினுடைய இசைக் குழுவினரோடு பழையமாணவர்கள் மற்றும் இசைக்கலைஞர்கள் இணைந்து வழங்கிய ஒரு இசை மாலைப்பொழுதும் இடம்பெற்றது. மேலும் ஆசிரியர் விமலநாதன் அவர்களின் நெறியாள்கையின் கீழே நடாத்தப்பட்ட இசைநாடகமும் நடைபெற்றது.

இந்நிகழ்வின் நுழைவுச் சீட்டுக்கள் விற்பனை மற்றும் நிகழ்விற்கான அனுசரனை என்பவற்றினால் எமது சங்கத்திற்கு வருமானமாக ஏறத்தாழ 3,75,000.00 ரூபா கிடைக்கப்பெற்றது குறிப்பிடத்தக்கது.




# பழைய மாணவர் சங்க விற்பனை நிலையம்

எமது சங்கத்தினால் பழையமாணவர் சங்க அறையில் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு வந்த நினைவுப் பொருட்கள் மற்றும் காகிதாதிப் ˙பொருட்கள் விற்பனை நிலையம் கடந்த சில காலமாக கொவிட் மற்றும் புறச்சூழல் காரணமாக இயங்காத நிலையில் எமது செயற்குழுவினால் மீள ஆரம்பிக்கப்பட்டு திறம்பட இயங்கி வருகிறது.

எமது பாடசாலைக்கும் கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையில் நடைபெறுகின்ற இந்துக்களின் சமர் என்ற துடுப்பட்டபோட்டியின் ஞாபகார்த்தமாக எமது சங்கத்தினால் முன்மொழிவு செய்யப்பட்ட இரண்டு பாடசாலைகளினதும் இலட்சனைகளோடு இணைந்த இந்துக்களின் சமர் என்று குறிப்பிட்ட இலட்சனையை நாம் உருவாக்கியிருந்தோம். அந்த சின்னம் பொறிக்கப்பட்ட இரண்டு பாடசாலைகளினதும் நிறங்கள் உள்ளடக்கியதாக எம்மால் தயாரிக்கப்பட்ட கொசுவுச் சட்டைகள் (T- shirts) விற்பனை செய்யப்பட்டது.

மேலும் கல்லூரி இலட்சனை பொறிக்கப்பட்ட எமது பாடசாலை நிறத் தொப்பிகள் எமது சங்கத்தினால் வெளியிடப்பட்டு மாணவர்களிற்கும் பழையமாணவர்களிற்கும் எமது விற்பனை நிலையமூடக விற்பனை செய்யப்பட்டுவருகிறது.



# மாணவர்களுக்கான நீச்சல் பயிற்சி

எமது சங்கத்தினால் உயிர் காக்கும் கலையான நீச்சலை மாணவர்கள் பயிற்சி பெறும் நோக்கத்துடன், கல்லூரி மாணவர்களிற்கு நீச்சல் பயற்சிகளிலே ஆர்வத்தினை ஏற்படுத்தும் முகமாக சபாலிங்கம் அரங்கத்தில் யாழ் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான துறைத் தலைவர் கலாநிதி சி. சபாஆனந் அவர்களால் ஒரு ஆரம்ப செயலமர்வு நடாத்தப்பட்டது.

அதேபோல் நீச்சலை மாணவர்கள் தொடர்ந்து பயிற்சி பெறும் நோக்கத்துடன் தனியார் ஒருவரினால் நடத்தப்படுகின்ற நீச்சல் தடாகத்தில் பயிற்சிகளை பெற்றுக்கொள்ள எமது சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதற்கான அனுசரனையினை எமது சங்கத்தின் ஊடாக அமெரிக்கா வாழ் 2003 உயர் தர பிரிவைச் சேர்ந்த பழைய மாணவரான திரு.வி.விபூசன் அவர்கள் வழங்கிவருகிறார். இதன் அடிப்படையில் ஏறத்தாழ 100 மாணவர்கள் இந்த பயிற்சியை தொடர்ச்சியாக இலவசமாக பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் அவர்களிற்குரிய போட்டி மற்றும் ஏனைய நிகழ்வுகள் விரைவிலே நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



# இணைய வழிக் கலந்துரையாடல்கள்

எமது சங்கத்தினால் ஆரம்ப காலத்தில் நடத்தப்பட்ட முழுநிலா நாள் கருத்தரங்கை தொடர்ச்சியாக நடத்துவதிலே கடந்தகால செயற்குழுக்கள் எடுத்த முயற்சிகள் வெற்றிதராத நிலையில் எமது செயற்குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் மாதாந்த இணையவழி கலந்துரையாடல்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்தவகையிலே எமது சங்கத்தினால் மூன்று இணையவழி கலந்துரையாடல்கள் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. குறித்த மூன்று இணையவழி கலந்துரையாடல்களும் பதிவு செய்யப்பட்டு காணொலிகளாக youtube தளத்திலே வெளியிடப்பட்டுள்ளது.

முதலாவது நிகழ்வாக பாடசாலை மாணவர்கள் மத்தியின் போதைப் பொருள் பாவனையும் அதனை தடுக்கும் முறைகள் தொடர்பாகவும் தெரிந்து கொள்ளவேண்டியவையும் என்ற தலையங்கத்திலே வைத்தியநிபுணர் சிவதாஸ் அவர்கள் கலந்து கொண்ட நிகழ்வு நடைபெற்றது.

இரண்டாவது கலந்துரையாடலாக இலங்கையில் உள்ளவரி நடைமுறைகளும் அது தொடர்பான விளக்கங்கள் என்ற தலைப்பில் முகாமைத்துவகற்கைகள் வணிகபீடத்தினை சேர்ந்த கலாநிதி. ராமேஸ் அவர்கள் கலந்துரையாடலைவழங்கியிருந்தார்

மூன்றாவது கலந்துரையாடலில் தற்காலத்திற்கு ஏற்ற இன்னுமொரு முக்கியமான விடயமான தழிழர்களாக எமது பிராந்தியத்தில் தற்போது பொருளாதார பின்னடைவிலிருந்து மீண்டும் எழுவதற்கான செயற்பாடுகளில் தொழில்வழங்குனர்களும் அரசியல்வாதிகளும் பொதுமக்களினதும் வகிபாகம் தொடர்பாக பொருளாதார ஆலோசகரும் முன்னாள் SLAS அதிகாரியுமாகிய திரு. மா. செல்வின் அவர்கள் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கியிருந்தார்.

இணைய வழி கருத்தரங்கு











கா.பொ.த(உ-த) மாணவர்களுக்கான கருத்தமர்வு



# க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான கருத்தமர்வுகள்

க.பொ.த உயர்தர பரீட்சையிலே தோற்றும் மாணவர்களிற்கான இணைய வழி கருத்தரங்குகள் எமது சங்கத்தினால் இம்முறை முதல் முறையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

அந்த கலந்துரையாடல்களிலே க.பொ.த உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பாடத்தில் செய்யவேண்டியவையும் செய்ய கூடாதவையும் என்ற தலைப்பிலே பேராசிரியர் கபிலன் அவர்கள் கலந்துரை வழங்கியிருந்தார்

அதேபோல பௌதிகவியல் பாடத்திலே செய்ய வேண்டியவையும் செய்ய கூடாதவையும் என்ற தலைப்பில் கலாநிதி பத்மதாஸ் அவர்கள் கருத்துரைகளை வழங்கியிருந்தார்.

இரசாயனவியல் பாடத்திலே செய்யக்கூடியவையும் செய்யக்கூடாதவையும் என்ற தலையங்கத்தில் பேராசிரியர் சிறிகரன் அவர்கள் கருத்துரைகள் வழங்கியிருந்தார்

கணக்கீடு பாடத்தில் செய்யவேண்டியவையும் செய்யக் கூடாதவையும் என்றதலைப்பில் பேராசிரியர் நிமலதாசன் அவர்கள் கருத்துரைகளை வழங்கியிருந்தார்.

இந்தகருத்தரங்கிலே இணையத்தள வழியாக நாட்டின் பல பகுதிகளை சேர்ந்த மாணவர்கள் கலந்து பயன்பெற்றுக் கொண்டார்கள். அதேபோல இதன் காணொலிப் பதிவுகள் youtube தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

# ஆசிரியர்களுக்கான சுகாதார மேம்பாட்டு மருத்துவ முகாம்

பாடசாலை ஆசிரியர்களின் சுகாதார மருத்துவ நிலைமைகளை பரிசோதிப்பதற்காக ஆசிரியர் கழகத்தின் வேண்டுகோளிற்கு அமைவாக எமது சங்கத்தினால் அவர்களிற்குரிய இலவச மருத்துவபரிசோதனைகளும் சலுகை விலையில் இரத்தபரிசோதனைகளும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த மருத்துவமுகாமில் வைத்திய நிபுணர் லக்ஸ்மன் வைத்திய நிபுணர் அரவிந்தன் வைத்திய நிபுணர் காண்டீபன் வைத்தியநிபுணர் ஆதவன் ஆகியோர் தமது நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்கியிருந்தார்கள் மேலும் பல பழையமாணவர்களான வைத்தியர்களும் இந்த நிகழ்வுகளிலே கலந்து தமது சேவையினை வழங்கியிருந்தனர்.

இதன் மூலம் ஆசிரியர்கள் மாத்திரமல்லாது கல்விசாரா உத்தியோகத்தர்களும் பயனடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அவர்களின் வேண்டுகோளின் அடிப்படையிலே இச் செயற்பாடு இனிவரும் காலங்களிலே குறித்த கால இடைவெளிகளில் தொடர்ச்சியாக நடாத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

அதேபோல கல்லூரியின் சுகாதார மேம்பாட்டு அலகை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளையும் எமது சங்கம் முன்னெடுத்து வருகிறமையும் குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர்களுக்கான சுகாதார மேம்பாட்டு மருத்துவ முகாம்




குருதிக்கொடை முகாம்



## விடுதி மாணவர்களிற்கான அனுசரணை

விடுதி மாணவர்களிற்கான உதவித் தொகை வழமை போல எமது சங்கத்தினால் வழங்கப்பட்டு வருகிறது யாவரும் அறிந்தமையே.

பிரதானமாக இதற்கான நிதித் தொகை, பிரித்தானியா பழையமாணவர் சங்கத்தினால் வைப்பிடப்பட்ட நிலையான வைப்பிலிருந்து கிடைக்கப் பெறுகின்ற வட்டிப்பணம் மூலமும் மனிதநேயம் அமைப்பினால் வழங்கப்படுகின்ற உதவித் தொகை மூலமும் தொடர்ச்சியாக வழங்கப்பட்டுவருகிறது.

இதற்கு மேலதிகமாக மாணவர்களுடைய நலன்கள் அவர்களுடைய பராமரிப்பு தொடர்பாகவும் எமதுவிடுதிக் குழுவும் மாணவர்களும் கலந்துரையாடி அதன் மூலம் கிடைக்கப் பெற்ற அவதானிப்புக்கள் பாடசாலை நிர்வாக அதிபரிடம் தெரியப்படுத்தப்பட்டு முன்னேற்றத்திற்கான பல நடவடிக்கைகள் எமது சங்கத்தினால் எடுக்கப்பட்டது தற்காலத்திலே ஏற்படுகின்ற பணவீக்கத்தின் காரணமாக ஏற்படுகின்ற மாற்றங்களிற்கு ஏற்றாற்போல் விடுதிக் கட்டண தீர்மானத்தினை மாற்றுவதற்கான கல்லூரி நிர்வாக கோரிக்கமைவாக அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வேறு நன்கொடையாளர்கள் மூலம் கிடைக்கப் பெற்றுவந்த பண உதவிகள் கிடைக்காத பட்சத்தில் கல்லூரி நிர்வாககத்தின் கோரிக்கைக்கு அமைவாக அதற்கான மாற்று ஏற்பாடுகளும் எமது சங்கத்தினால் செய்யப்பட்டது.

எமது சங்கத்தினுடாக உதவிகள் செய்யப்படுமிடத்து இவ்வாறான நிலைமைகளை தவிர்க்கலாம் என எமது அங்கத்தவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

## குருதிக் கொடை முகாம்

எமது சங்கத்தினால் வருடாந்தம் நடாத்தப்பட்டு வரும் குருதிக் கொடை முகாம் எமது செயற்குழுவினால் 2022 செப்டெம்பர் 24 ஆந் திகதியும் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் 51 பேர் கருதிக்கொடை வழங்கினர்.

## கல்லூரி மலசல கூடங்களை துப்பரவாக்கல்

கல்லூரி மலசலகூடங்கள் மாணவர்களின் பாவனக்கு ஏற்றவிதத்தில் காணப்படாமை குறித்து அவதானிக்கப்பட்ட நிலையில், எமது சங்கத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு க.பொ.த. உ-த 2000 பிரிவைச் சேர்ந்த பழைய மாணவர்களின் நிதி அனுசரணையுடன் உடனடியாக அவை பாவனைக்கு ஏற்றவிதத்தில் துப்பரவாக்கம் செய்யப்பட்டது.

## இணையத்தளம் புதிய வடிவமைப்பு

எமது சங்கத்தின் இணையத்தளமானது புதிய வடிவமைப்புடன் சங்க உறுப்பினர்களுக்கு மேலும் வசதிகளை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு வருகிறது. ஏறத்தாழ இறுதிக்கட்டத்தினை அடைந்துள்ளது. இதன் மூலம் சங்க உறுப்பினர்கள் தகவல்களை வெளிப்படைத் தன்மையுடன் பெற்றுக்கொள்ளலாம்.

## மேசைப்பந்தாட்ட மேசை கொள்வனவுக்கான நிதி

கல்லூரியின் வேண்டுகோளிற்கிணங்க 05 சர்வதேச தர மேசைப்பந்தாட்ட மேசைகளை கொள்வனவு செய்ய 12 இலட்சத்து 19ஆயிரத்து 300 ரூபா நிதி அனுசரணையை அமெரிக்காவில் வசிக்கும் கல்லூரியின் பழைய மாணவர் திரு. ஹரி ராஜ் அவர்கள் எமது சங்கத்திற்கு வழங்கியுள்ளார். விரைவில் குறித்த மேசைப்பந்தாட்ட மேசைகள் கொள்வனவு செய்யப்பட்டு கல்லூரிக்கு வழங்கப்படவுள்ளது.

**யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி**

**பழைய மாணவர் சங்கம்**

**யாழ்ப்பாணம்**

**இணையத்தளம்:**

www.jhcobajaffna.com

You Tube **தளம்:**

Jaffna Hindu College Old Boys Association

https://youtube.com/@jaffnahinducollegeoldboysa2629